தினமணி 14 AUG 2002

# நீலகிரி வனப்பகுதி புள்ளி விவரங்கள் எடுக்க மத்திய அரசு ரூ.5 கோடி ஒதுக்கீடு: ஆட்சியர்

**உதகை, ஆக. 14:** இஸ்ரோ அமைப்பின் ஒத்துழைப்புடன் நீலகிரி மாவட்டத்திலுள்ள வனப்பகுதிகள் குறித்த புள்ளி விவரங்களை எடுக்க மத்திய அரசு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளதாக நீலகிரி மாவட்ட ஆட்சியர் சுப்ரியா சாஹூ தெரிவித்தார்.

வனத்தில் கிடைக்கும் இயற்கை பொருட்கள் குறித்த தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கருத்தரங்கு உதகையில் நடைபெற்றது.

தில்லியிலுள்ள போர்டு பவுண்டேஷன் மற்றும் நெதர்லாந்திலுள்ள ஐசிசிஓ ஆகிய அமைப்புகளின் சார்பில், கோத்தகிரியில் இயங்கும் கீஸ்டோன் அமைப்பினர் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

ஆக.7-ம் தேதி முதல் நடைபெற்று வந்த இக்கருத்தரங்கில் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் நாடுகளின் பிரதிநிதிகளோடு இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

கருத்தரங்கின் நிறைவு விழா, உதகை தாஜ் அரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் சுப்ரியா சாஹூ பேசியதாவது:

யுனெஸ்கோ அமைப்பினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உலகின் 14 உயிர்ச்சூழல் மண்டலங்களில் நீலகிரியும் ஒன்று. இம்மாவட்டத்தில் 59 சத நிலம் வனப்பகுதியாக உள்ளது. வனப்பகுதிகளுக்குள் வசிக்கும் கோத்தர், தோடர் போன்ற பழங்குடியின மக்கள் சிரமமான சூழ்நிலைகளில் இருந்தாலும் இயற்கையோடு ஒத்துவாழ்கின்றனர்.

வனப்பகுதிகளில் எவ்வித அழிவும் ஏற்படாமலிருக்க மத்திய அரசு கடந்த 99-ம் ஆண்டில் வெளியிட்ட உத்தரவின் அடிப்படையில் நீலகிரியின் வனப்பகுதிகள் சிறப்பாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. முதுமலை வனச்சரணாலயம் அருகேயுள்ள ஆனைகட்டி மற்றும் சிறியூர் பகுதிகளில் மகளிர் சுயஉதவிக் குழுக்களால் மருத்துவ மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதால் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு மருத்துவ மூலிகைகளை பயிரிட வன நிலமே கொடுக்கப்பட்டுள்ளது. மொத்த திட்டத்தில் 50 சதத்தை மத்திய அரசு கடனாகவும் வழங்கியுள்ளது. வனவிலங்குகளால் இந்நிலங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமலிருக்க சூரிய சக்தியால் இயங்கும் மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரோ அமைப்பின் ஒத்துழைப்புடன் நீலகிரி மாவட்டத்திலுள்ள வனப்பகுதிகள் குறித்த புள்ளி விவரங்களை எடுக்க மத்திய அரசு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது என்றார் ஆட்சியர்.

இந்நிகழ்ச்சியில் தமிழக முதன்மை வனப்பாதுகாவலர் சி.கே.ஸ்ரீதரன் உள்ளிட்ட பலர் பேசினர்.

முன்னதாக கீஸ்டோன் அமைப்பின் சார்பில் பிரதிம் ராய் வரவேற்றார். நீலகிரியைக் காப்போம் இயக்கத் தலைவர் பி.ஜே.கிருஷ்ணன் நன்றி கூறினார்.